*பொதுக்காலத்தின் இருபத்தெட்டாம் ஞாயிறு*

*திருவழிபாடு ஆண்டு* - **B**

**2024-10-13**

**(***இன்றைய வாசகங்கள்:*

*சாலமோனின் ஞான நூலிலிருந்து வாசகம்:* **7:7-11,**

*பதிலுரைப்பாடல்: திபா.* **90:12-17,**

*எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலிருந்து வாசகம்.* **4:12-13,**

*மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* **10: 17-30)**

*திருப்பலி முன்னுரை*

*இறைவனுக்குரியவர்களே, பொதுக்காலத்தின் இருபத்தெட்டாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். கடவுளைவிட உலகப் பொருட்களில் அதிகப் பற்று வைக்கும் எவரும் இறையாட்சில் நுழைய முடியாது என்பதை உணர இன்றைய திரு வழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. மனிதர்களாகிய நாம் அனைவரும் கடவுளை அறிந்து, அவரை அன்புசெய்து வாழவே படைக்கப்பட்டிருக்கிறோம். இறை உறவிலும், மனித உறவிலும் நாம் வளர்ச்சி காண கடவுள் வழங்கியுள்ள பத்து கட்டளைகள் நமக்கு வழிகாட்டுதலாக அமைந்துள்ளன. அவற்றைச் சுருக்கி ஒரே அன்பு கட்டளையாக இயேசு நமக்கு வழங்கினார். நமது அன்பு செயல் வடிவம்*

*பெறும் பொழுதுதான் நாம் இறையாட் சிக்கு நெருக்கமானவர்களாக மாற முடியும். செல்வம், உறவு, புகழ் என எது அன்புக்குத் தடையாக இருந்தாலும் அங்கு இறையாட்சி தடுக்கப்படுகிறது. உலகப் பொருட்களைப் புறக்கணித்து இறையாட்சியை விரும்பித் தேடும் நல்ல மனம் வேண்டி, இந்த திருப்பலி யில் பங்கேற்போம்.*

*விசுவாசிகள் மன்றாட்டுகள்:*

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*நற்செய்தியைப் போதித்தவரே எம் இறைவா!*

*உமது வாக்கிற்கிணங்க திருஅவையை வழிநடத்துகின்ற உமது அடியார்களைக் கண்ணோக்கிப் பாரும். அவர்கள் உமது பணியினைச் செம்மையாய்ச் செய்ய வேண்டிய ஆற்றலைக் கொடுத்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*மனிதரால் இது இயலாது, ஆனால், கடவுளுக்கு அப்படியல்ல; கடவுளால் எல்லாம் இயலும் என்று மொழிந்த இறைவா!*

*இவ்வுலகில் வாழ்கின்ற உம் மக்களின் தேவைகளை அறிந்து அவர்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*நிலைவாழ்வு அளிப்பவரே எம் இறைவா!*

*நாங்கள் இவ்வுலக வாழ்வு மாயை என்பதனை உணர்ந்தவர்களாக உமது கட்டளையைக் கடைப்பிடித்து அதன்படி வாழ வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*வாழ்வளிக்கும் வார்த்தையானவரே எம் இறைவா!*

*நாங்கள் வெற்று வார்த்தைகளால் பிறரைக் காயப்படுத்துகிறோம். வெற்று வார்த்தையால் நாள்தோறும் நேரத்தை வீணாக்குகின்றோம். உமது வாழ்வளிக்கும் வார்த்தையால் எங்களைத் தூய்மையாக்க வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*நோய் தீர்க்கும் வள்ளலே எம் இறைவா!*

*பலவித கொடிய நோய்களால் அவதிப்படுகின்ற உம் மக்களுக்கு நீரே மருத்துவராக இருந்து, அவர்கள் நோயிலிருந்து விடுபட வேண்டிய அருளைப் பொழிய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*துன்பங்களை நீக்குபவராம் இறைவா,*

*உலகெங்கும் நீதிக்காகவும், அமைதிக்காகவும் ஏங்கும் உமது மக்களின் துன்பங்களை நீக்கி, அவர்கள் விரும்பும் நீதியும் அமைதியும் நிறைந்த உலகை உருவாக்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*துன்புற அழைப்பவராம் இறைவா,*

*உம் திருமகன் இயேசுவின் சிலுவைப் பயணத்தைப் பின்பற்றி, இறையாட்சியின் இலட்சியங்களுக்காக தங்களை முழுமையாக அர்ப்பணிக்கும் நல்ல உள்ளத்தை எம் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள்,*

***பங்கு மக்கள் அனைவருக்கும் தந்தருள வேண்டு மென்று உம்மை மன்றாடுகிறோம்.***